# சைதை சா. துரைசாமியின்
# மனிதநேயம் ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா கல்வியகம்

28, முதல் பிரதான சாலை, சி.ஐ.டி.நகர், சென்னை-600035.
போன்: 2435 8373, 98401 06162
**Email : manidhanaeyam@gmail.com Website: www.saidais.com**


## தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்திய உதவிபொறியாளர்(சிவில்)நெடுஞ்சாலைத்துறை நேர்முகத்தேர்வில் 13 மனிதநேய மாணவ-மாணவியர்கள்வெற்றி !!!

திரு.சைதை துரைசாமி, திருமதி மல்லிகா துரைசாமி, திரு.வெற்றி துரைசாமி மற்றும் திருமதி வசுந்தரா வெற்றி ஆகியோரால் சமுதாயம் மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்களுக்கு உதவும் பொருட்டு கடந்த 2005ஆம் ஆண்டு "**மனிதநேய அறக்கட்டளை**" தொடங்கப்பட்டு, மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. சாதி, மத பாகுபாடுமின்றி அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், பல்வேறு சமுதாயப் பணிகள் இந்த அறக்கட்டளையின் மூலமாக செய்யப்பட்டு வருகின்றன.

"**மனிதநேயம் ஐஏஎஸ் கட்டணமில்லா கல்வியகம்**" மூலம், தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துத் தரப்பு மாணவ-மாணவியர்களும் இந்திய அளவில் உயர்பதவிகளான ஐஏஎஸ், ஐபிஎஸ் போன்றவற்றிற்கு தேர்வு செய்யப்பட வேண்டுமென்கிற உயர்ந்த நோக்கோடு கடந்த பத்து ஆண்டுகளில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ், ஐஎ.ஃப்எஸ், ஐஆர்எஸ், இந்தியவனத் துறை பணி ஆகிய பதவிகளுக்கும், தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் குரூப்-I, (DC, DSP, DRO, AD, DEO, CTO), பதவிகளுக்கும் குரூப் -II, (நகராட்சி ஆணையர், சார் பதிவாளர், தொழிலாளர் துறையில் உதவி ஆய்வாளர் மற்றும் தலைமை செயலக உதவி பிரிவு அலுவலர், பேரூராட்சி செயல் அலுவலர், சிறைத்துறை நன்னடத்தை அதிகாரி, இந்து அறநிலையத்துறை தணிக்கை ஆய்வாளர், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், கூட்டுறவு தொழில் மேற்பார்வையாளர், வருவாய்த்துறை உதவியாளர்) பதவிக்கும் சிவில் நீதிபதி பதவிகளுக்கும், SUB-INSPECTOR, A.E (HIGHWAYS, RURAL DEVELOPMENT & PANCHAYAT RAJ, PWD (CIVIL,ELECTRICAL)) போன்ற பதவிகளுக்கும் இதுவரை **2657** க்கும் மேற்பட்ட மாணவ – மாணவியர்கள் வெற்றி பெற்று மாநில மற்றும் தேசிய அளவிலும் பல்வேறு உயர் பதவிகளில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**இதன் தொடர்ச்சியாக, உதவி பொறியாளர்(சிவில்)நெடுஞ்சாலைத்துறை பணிக்கு TNPSC ஆல் 2015 ஆம் ஆண்டு ஜுலையில் அறிவிக்கப்பட்டு, 2015 செப்டம்பரில் எழுத்துத்தேர்வு நடைபெற்று, 09.12.2015 மற்றும் 05.01.2016 அன்று வெளியிடப்பட்ட முடிவில் தேர்வாகியுள்ள மாணவ மாணவியர்களுக்கு 11.01.2016 முதல் 14.01.2016 வரை TNPSC நடத்திய நேர்காணலில் மனிதநேயத்தில் பயின்று பயிற்சி பெற்ற 13 மாணவ – மாணவியர் (மாணவியர் -7, மாணவர் - 6) வெற்றி பெற்றுள்ளனர். இதில் ஒரு மாணவி மாற்றுத்திறனாளி என்பது குறிப்பிடத்தக்கது.**

வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மனிதநேய அறக்கட்டளையின் தலைவர் திரு.சைதை துரைசாமி அவர்கள் வாழ்த்து தெரிவித்தார் என இம்மையத்தின் மாநில தேர்வுகள் ஒருங்கிணைப்பாளர் திரு.சாம் ராஜேஸ்வரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# Manidhanaeyam Successful Candidates of TNPSC AE (Civil) Highways Exam 2015



Deepana. G

(Reserve List-2)



Kalpana. V



Mithesh. M



Nandhini. P A



Parvathani Shanthini. B



Ponmurali. S



Radha. S

(Physically Handicapped)



Ramesh. S



Saravanan. M



Umadevi. A